செய்தி வெளியீடு எண் : 1211 நாள் : 14.08.2024

**மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.இ.பெரியசாமி அவர்களின் ஆய்வுக்கூட்டம்**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.இ.பெரியசாமி அவர்கள் தலைமையில், இன்று (14.8.2024) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரக பனகல் மாளிகை கட்டட கூட்டரங்கில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் வளர்ச்சித் திட்டங்களின் பணிமுன்னேற்றம் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இவ்வாய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகளின் முன்னேற்றங்கள் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். மேலும் இத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் கலைஞர் கனவு இல்லம் திட்டம், ஊரக குடியிருப்புகள் புதுப்பிக்கும் திட்டம், முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் –II, புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்), தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்), ஜல் ஜீவன் இயக்கம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களின் பணி முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

ஊரகப்பகுதிகளில் உள்ள அனைத்து மக்களுக்கும் குடிநீர், தெருவிளக்கு, சாலைப்பணிகள் உட்பட அரசின் வளர்ச்சித் திட்டங்கள் உரிய நேரத்தில் சென்றடையும் வகையில் சிறப்பு கவனம் செலுத்தி முனைப்புடன்பணியாற்றிடவேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்கள்.

இந்த ஆய்வு கூட்டத்தில் அரசு கூடுதல் தலைமை செயலாளர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., இயக்குநர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu